## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 19.02.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், காரைக்காலிலுள்ள பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத் துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தேவை மற்றும் எதிர்கால கல்வித் திட்டம், ஆராய்ச்சி மற்றும் விவசாய-வணிக நடவடிக்கைகள் மூலம் தேசிய மற்றும் சர்வதேச புகழ் பெற்ற நிறுவனம். அதே சமயம், காரைக்காலிலுள்ள பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், விவசாயக் கல்வி, யூனியன் பிரதேசத்தின் விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகிய முக்கிய நோக்கங்களைக் கொண்ட புதுச்சேரி அரசின் தன்னாட்சி கல்வி நிறுவனமாகும். இரண்டு நிறுவனங்களும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில், புதுதில்லியின் அங்கீகாரம் பெற்றுள்ளது. கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் காரைக்காலில் உள்ள பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே முதுகலை மாணவர்களின் ஆராய்ச்சியை எளிதாக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது.

முதுகலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான ஒப்பந்தத்தில் கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ஆர்.தமிழ்வேந்தன் மற்றும் காரைக்கால் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மையர் மற்றும் உறுப்பினர் செயலாளர் (ஆளும் குழு), முனைவர் எ.புஷ்பராஜு ஆகியோர் வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி முன்னிலையில் கையெழுத்திட்டனர்.

முதுகலை பட்டமேற்படிப்பு பயிலக முதன்மையர் முனைவர் ந.செந்தில் அவையோரை வரவேற்று, இந்த குறிப்பிட்ட ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை விவரித்தார். இவ்விழாவில் துணைவேந்தரின் தனி அலுவலர், பேராசிரியர் முனைவர் எஸ்.டி.சிவக்குமார் உடன், காரைக்கால் வேளாண்மைக் கல்லூரி வேளாண் பொருளாதாரம் மற்றும் விரிவாக்கத்துறை பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் என்.சுவாமிநாதன் மற்றும் வேளாண் விரிவாக்கத்துறை பேராசிரியர் முனைவர் எஸ்.பார்த்தசாரதி ஆகியோர் இக்கையெழுத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**